**சிலின்டெக் அக்கடமி -2017/2018**

-------------------------------------------------------

சிலின்டெக் அக்கடமியின் (''கம்பனி'') 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆறு மாத காலப்பகுதிக்கான 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அந்த ஆறு மாத காலப்பகுதிக்கான இலாப நட்டக்கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்துறையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை நான் பெற்றிருந்தேன்.

## 1.1 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

-------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

## 1.2 கணக்காய்வாளரின் பொறுப்பு

---------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) எஸ்எம்ஈ இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ் இன் ஏற்பாடுகளின் பிரகாரம் காசு அடிப்படையில் கணக்கு வைத்தல் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. எனினும், அதற்கு முரணாக கம்பனியானது ரூபா 3,200,000 இனை வருமானமாக அங்கீகரிப்பதற்கு பதிலாக காசு அடிப்படையில் ரூபா 1,900,000 இனை வருமானமாக அங்கீகரித்திருந்தது. இதன் விளைவாக வருமானம் மற்றும் பெற வேண்டியவைகள் ரூபா 1,300,000 இனால் குறைத்து கணிப்பிடப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பிற்போடப்பட்ட வருமானமாக ரூபா 3,200,000 கூட்டுத்தொகை கருத்திற்கொள்ளப்பட வேண்டும். எனினும், ரூபா 1,000,000 மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்தமையால் பிற்போடப்பட்ட வருமானமானது ரூபா 2,200,000 இனால் குறைக்கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது.

(இ) கம்பனி கடந்த வருடத்தில் கொள்வனவு செய்த ரூபா 639,678 பெறுமதியான புத்தகங்கள் நிலையான சொத்துக்களாக பதிவு செய்யப்பட்டிராததுடன், கடந்த மற்றும் மீளாய்வாண்டிற்கு உரியதாக பெறுமானத் தேய்விடப்பட்டிருக்கவில்லை.

### 2.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.3 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

அ. அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

ஆ. நான் அபிப்பிராயப்படுவதாவது,

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனி நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 220 ஆம் பிரிவின் பிரகாரம் கூறப்பட்ட மூலதனம் அரைவாசியைவிடக் குறைவாகக் காணப்படுகின்றதுடன் தீவிரமான மூலதன இழப்பொன்றை முகங்கொடுகின்றமை குறிப்பிடப்படல் வேண்டும். நிதிக்கூற்றுக்களின் 29 ஆம் குறிப்பு இந்த நிலைமையினைக் குறைப்பதற்கு கம்பனியால் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகளினை விபரிக்கின்றது.

## 3. நிதி மீளாய்வு

-------------------

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

---------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆறு மாத காலப்பகுதிக்காக கம்பனியின் செயற்பாடுகளின் பெறுபேறாக ரூபா 29,123 தொகையான நட்டத்தினை ஈட்டியிருந்தது.

## 4. செயற்பாட்டு விளைவுகள்

---------------------------------

### 4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

---------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. தொடக்க கல்வியாண்டில் இணைத்துக்கொள்ளப்பட்ட பதினைந்து மாணவர்களில் 13 பேருக்கு ரூபா 100,000 முதல் 500,000 வரையான வீச்சிலான கழிவுகள் வழங்கப்பட்டிருந்ததுடன், ஆறு மாணவர்களுக்கு ரூபா 150,000 முதல் ரூபா 300,000 வீச்சிலான கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. மேலும், ரூபா 400,000 படியான புலமைப்பரிசில்கள் கழிவினை பெற்ற நான்கு மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், மேற்படி சலுகைகள் உரிய அங்கீகாரம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட திட்டமொன்றில்லாது வழங்கப்பட்டிருந்தது.

ii. 2017 ஆகஸ்ட் 16 ஆந் திகதிய 2032/23 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், ஸ்ரீலங்கா இன்ஸ்ரிரியூட் ஒவ் நனோரெக்னோலஜி (பிறைவேட்) லிமிடட் நிறுவனமானது உயர் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பட்டமளிக்கும் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மேலும், தலைமை நிர்வாக உத்தியோகத்தர் அவரின் 2018 செப்தம்பர் 20 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் சிலின்டெக் அக்கடமியானது எம்பில் (Mphil) மற்றும் பீஎச்டீ (PhD) வழங்குவதாக அறிவித்திருந்தார். எனினும், மேற்குறித்த நோக்கத்தை ஏற்றுக்கொள்ள உறுதிப்படுத்தப்பட்ட எழுத்து மூல ஆவணங்கள் எவையும் முன்வைக்கப்படவில்லை.

iii. மீளாய்வாண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையிலும் மேற்கொண்ட பணிகளுக்கான ஊழியக் கிரயமாக ஸ்ரீலங்கா இன்ஸ்ரிரியூட் ஒவ் நனோரெக்னோலஜி (பிறைவேட்) லிமிடட்டிற்கு சிலின்டெக் அக்கடமியினால் ரூபா 5,708,045 தொகையானது மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது. எனினும், சிலின்டெக் அக்கடமியினால் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட வேலை தொடர்பான விபரங்களை முன்வைக்கத் தவறியிருந்தது. இதன் காரணமாக மேற்குறித்த கொடுப்பனவின் சரியான தன்மை தொடர்பில் கணக்காய்வில் திருப்திகொள்ள முடியாதுள்ளது.

iv. சிலின்டெக் அக்கடமிக்கான மாணவர்களை இணைத்துக்கொள்வதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதனால், பதிவு செய்ய 14 மாணவர்களில் ஐந்து மாணவர்கள் மாத்திரம் செலுத்த வேண்டிய விண்ணப்பக் கட்டணத்தினை செலுத்தியிருந்ததுடன், வரையறுக்கப்பட்ட சிலின்டெக் (தனியார்) கம்பனியில் பணிபுரியும் 4 மாணவர்கள் உள்ளடங்களாக ஐந்து மாணவர்கள் மாத்திரம் ரூபா 100,000 தொகையான பதிவுக் கட்டணத்தினை செலுத்தியிருந்தனர், அத்துடன், அவர்களால் முதலாம் தவணை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

v. நெனோ மற்றும் உயர் தொழில்நுட்ப துறையிலான பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதன் மூலம் சிலின்டெக் இன் ஆராய்ச்சி இயலளவினை அபிவிருத்தி செய்யும் கரமாக சிலின்டெக் அக்கடமி ஆரம்பிக்கப்பட்டது. இந்த அக்கடமியானது ஸ்ரீலங்கா இன்ஸ்ரிரியூட் ஒவ் நனோரெக்னோலஜி (பிறைவேட்)

லிமிடட்டின் ஆய்வுகூடங்கள், விரிவுரை மண்டபங்கள் ஆகிய பௌதீக வளங்கள் மற்றும் மதியுரையாளர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் நிர்வாக பதவியணியினர் ஆகிய மனித வளங்களை பயன்படுத்துகின்றது. எனவே, கணக்காய்வின் அவதானிப்பின் பிரகாரம் சிலின்டெக் நிறுவனத்தினை நீண்ட காலத்திற்கு தனிப்பட்டதொரு நிறுவனமாக கொள்ளாது, அந்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் பணிகளை ஸ்ரீலங்கா இன்ஸ்ரிரியூட் ஒவ் நனோரெக்னோலஜி (பிறைவேட்) லிமிடட்டின் கீழ் இடமளிக்க முடியும்.